DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| Name : சுப்பிரமணி | Father/Husband Name : குமாரெட் |
|---|---|
| Age : 55 | Village : வெற்றிலையூரணி |
| Taluk : | Calling : பயர் ஆபீஸ் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the Dec 8, 2025 11:24 AM

(Accused Present.)

**<u>முதல் விசாரணை</u>** :-

1. நான் வெற்றிலையூரணியில் குடியிருந்து வருகிறேன். நான் பயர் ஆபீஸில் வேலை செய்து வருகிறேன்.

2. சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் காலை 11.00 மணிக்கு வெற்றிலையூரணி மாரியம்மன் கோவில் அருகே நானும், கிருஷ்ணன் என்பவரும் பேசிக் கொண்டிருந்த போது வெம்பக்கோட்டை காவல் நிலையத்தில் இருந்து காவல் சார்பு ஆய்வாளர் வந்து மாலதி வீட்டையும், சுற்றுப்புறத்தையும் பார்த்து விசாரணை செய்தார்கள். எங்களிடம் சாட்சிக்காக கையொப்பம் கேட்டார்கள். நாங்கள் கையொப்பம் போட்டுக்கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான்.(**<u>பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)</u>** இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -</u>**

3. போலீசார் கேட்டுக்கொண்டபடி நான் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றாலும், அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்பது எனக்கு தெரியாது என்றாலும் சரிதான். போலீசார் வந்தபோது அந்த இடத்தில் சுமார் 50 நபர்கள் இருப்போமா என்றால் இரண்டு பேரும் சென்று கொண்டிருந்தோம். நான் நீதிமன்றத்தில் அடையாளம் காண்பித்த என்னுடைய கையெழுத்தை காவல் நிலையத்தில் வைத்துதான் போட்டேன் என்றால் சரிதான். எங்கள் ஊருக்கு போலீசார் வந்த தினத்தில் தவிர வேறு நாளில் போலீசார் என்னை அழைத்து விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Dec 8, 2025 11:27 AM

Judicial Magistrate 2, Sattur